**செ. கு. எண்**:349 **நாள்**:24.09.2012

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

## அறிக்கை – 24.9.2012

வேலூர் மாவட்டம், வாலாஜா காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. E. ஞானமூர்த்தி அவர்கள் 17.9.2012 அன்று மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 19.9.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

கரூர் மாவட்டம், மாயனூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. K.பாண்டியன் அவர்கள் 16.9.2012 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 20.9.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகர காவல், சுப்பிரமணியபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. ப.பாண்டி அவர்கள் உடல்நலக் குறைவால் 22.9.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகர காவல், தெப்பக்குளம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு.S.மகேந்திரன் அவர்கள் உடல்நலக் குறைவால் 23.9.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. பாண்டி மற்றும் திரு. மகேந்திரன், தலைமைக் காவலர்கள் திரு. ஞானமூர்த்தி மற்றும் திரு. பாண்டியன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. ப.பாண்டி மற்றும் திரு.S.மகேந்திரன், மாரடைப்பால் காலமான தலைமைக் காவலர் திரு. E. ஞானமூர்த்தி மற்றும் சாலை விபத்தில் காலமான தலைமைக் காவலர் திரு. K. பாண்டியன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**